මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක 02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இலக்கம் : **PE/2024/27**

**2024.10.17**

## பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவம்பர் 14
## 2023 இல 03 தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் ஏற்பாடுகள்

2024 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் 2023 இல 03 எனும் தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிட முடியுமான செலவு எல்லைகள் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதென தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| இலக்கம் | தேர்தல் மாவட்டம் | ஒரு வேட்பாளர் செலவு செய்ய முடியுமான அதிகபட்ச செலவு எல்லை (ரு) | கட்சியொன்றுக்கு / சுயேச்சைக் குழுவொன்றுக்கு செலவு செய்ய முடியுமான அதிகபட்ச செலவு எல்லை (ரு) | தேசியப் பட்டியல் வேட்பாளர் ஒருவருக்கு செலவுசெய்ய முடியுமான அதிகபட்ச செலவு எல்லை (ரு) |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 5,750,000 | 79,493,756 | 34,698 |
| 2 | கம்பஹா | 5,643,387 | 81,735,055 | 35,677 |
| 3 | களுத்துறை | 4,740,787 | 43,694,249 | 19,072 |
| 4 | கண்டி | 5,146,844 | 50,825,081 | 22,185 |
| 5 | மாத்தளை | 3,450,678 | 18,173,570 | 7,933 |
| 6 | நுவரெலியா | 3,631,752 | 26,299,937 | 11,480 |
| 7 | காலி | 4,922,238 | 38,885,683 | 16,973 |
| 8 | மாத்தறை | 4,487,585 | 29,543,265 | 12,895 |
| 9 | ஹம்பாந்தோட்டை | 3,469,460 | 22,840,614 | 9,970 |
| 10 | யாழ்ப்பாணம் | 3,954,580 | 23,430,887 | 10,227 |
| 11 | வன்னி | 1,673,243 | 9,913,964 | 4,327 |
| 12 | மட்டக்களப்பு | 3,709,910 | 19,538,857 | 8,529 |
| 13 | திகாமடுல்ல | 3,765,829 | 24,791,707 | 10,821 |
| 14 | திருகோணமலை | 3,114,118 | 14,350,893 | 6,264 |
| 15 | குருணாகல் | 5,054,773 | 59,899,057 | 26,145 |
| 16 | புத்தளம் | 3,945,838 | 28,574,441 | 12,472 |
| 17 | அனுராதபுரம் | 4,080,241 | 32,233,904 | 14,070 |
| 18 | பொலன்னறுவை | 2,871,894 | 15,125,308 | 6,602 |
| 19 | பதுளை | 3,846,457 | 30,387,013 | 13,264 |
| 20 | மொணராகலை | 2,927,217 | 17,343,763 | 7,570 |
| 21 | இரத்தினபுரி | 4,354,755 | 40,136,329 | 17,519 |
| 22 | கேகாலை | 3,831,959 | 30,272,475 | 13,214 |

02. தேர்தல் பிரச்சார செலவினங்கள் அடங்கிய செலவின விபரத்திரட்டுக்கள் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு 21 (இருபத்தொரு) நாட்களுக்குள் ஏற்புடையவாறு கட்சிச் செயலாளரின், சுயேச்சைக் குழுத் தலைவரின் மற்றும் வேட்பாளரின் கையொப்பத்துடன் சத்தியப்பிரமாண ஆணையாளரினால் அல்லது சமாதான நீதவான் மூலம் அத்தாட்சிப்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

03. வேட்பாளர் சார்பாக பெறப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் அத்துடன் அத்தகைய நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் பொருளாகவிருப்பின் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியும், குறித்த உதவுதொகைகள் கொடை, கடன், முற்பணம் அல்லது வைப்பு என்ற வகையாக அன்பளிப்புச் செய்யப்பட்டதா என்பது தொடர்பிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**